**எங்கள் வாடிக்கையாளர், இலங்கையில் பரந்த கிளை வலையமைப்பைக் கொண்ட ஒரு அபிவிருத்தி வங்கியாகும் அது நமது தேசத்தில் செழிப்பை வளர்க்கும் ஒரு பயணத்தை தொடங்கியுள்ளது. வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை குறைக்கவும், வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் கிராமபுற தொழில் முனைவோரை வளர்ப்பதன் மூலம் நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்கவிப்பதே வங்கியின் நோக்கமாகும். அவர்கள் தற்போது தங்களின் தகவல் தொழில்நுட்பப் பிரிவை வழிநடதத செயற்றிறனை மையமாகக் கொண்ட ஒரு தொழில்முறை நிபுணரைத் தேடுகிறார்கள்.**

# பிரதான தகவல் அதிகாரி

**முக்கிய தேவைப்பாடுகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

- பல்கலைக்கழக மானியங்கள் கொமிஷன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணனி விஞ்ஞானம் அல்லது பொறியியல் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் அல்லது விஞ்ஞான பட்டத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் கொமிஷன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட உரிய துறையில் பட்டப்பின் படிப்பு அல்லது பட்டப்பின் டிப்ளோமா ஒன்றிருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மானியங்கள் கொமிஷன் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் தொடர்பாடற் தொழில்நுட்ப துறையில் பட்டப்பின் படிப்பொன்றினைக் கொண்டிருத்தல் தொடர்பில் விஷேட கவனஞ்செலுத்தப்படும்.

- தகவல் தொடர்பாடற் தொழில்நுட்ப செயற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் 12 வருடங்களிலான ஒட்டுமொத்த முன்னனுபவத்துடன் அதில் குறைந்தபட்சம் 08 வருடங்கள் சிரேஷ்ட முகாமையாளர் தரத்திலான முன்னனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். வங்கியொன்றிலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனமொன்றிலான முன்னனுபவத்தைக் கொண்டிருத்தல் மிகவும் பொருத்தமாக இருக்கும்.
- தகவல் தொடர்பாடற் தொழில்நுட்ப நடவடிக்கைகள் தொடர்பில் திறமை மற்றும் நவீன வங்கியியற் தொழில்நுட்ப வழிமுறைகள் தொடர்பிலான விழிப்புணர்வு.
- வங்கி வணிக நடவடிக்கைகளை தன்னிச்சையாக்குதல் தொடர்பில் கருத்தியல் இயலுமை மற்றும் அவற்றை மேம்படுத்தும் இயலுமையினைக் கொண்டிருத்தல்.
- வயது 57 வருடங்களுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

**சம்பளப் பொதி**

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி கவர்ச்சிகரமான பேசித் தீர்மானிக்கக்கூடிய சம்பளப் பொதிக்கு உரித்தாகுவர்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்ய தவறும் அல்லது தவறான தகவல்களை உட்படுத்திய விண்ணப்ப படிவங்கள் இவ் ஆட்சேர்ப்பு வழிமுறைகளில் எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் நேர்முகத் தேர்விற்கு அழைப்பதற்கும் இவ் ஆட்சேர்ப்பினை பிற்போட அல்லது இரத்து செய்வதற்கான உரிமை தொழில் தருணருக்கே உரியது.

தயவு செய்து இந்த விளம்பரம் வெளியான 10 நாட்களுக்குள் உங்களின் முழுமையான சுயவிவரத்தை PDF வடிவத்தின் தொடர்பில்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடன் mslrcv@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு பொருள்பகுதியில் MSL குறிப்பு எண் 8267 ஐக் குறிப்பிட்டு அனுப்பவும்.

MSL Management Systems (Pvt) Ltd.

**இல. 10, கோத்தமி வீதி,**
**கொழும்பு -08.**
**011 2015900**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED